பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஆடி: 29 றம்ழான்: 9 இதழ்: 184
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-8-78

PERIODICALS DIVISION

குடியியல் உரிமை ரத்துச் சட்டம்:

## அரசின் கொள்கைக்கும் அரசியலமைப்புக்கும் முரண்

### பேரவையில் நல்லூர் 'சிவா'

(கொழும்பு)

குற்றம் புரிந்த காலத்தில் அமுலில் இல்லாத சட்டத்தின்கீழ் எவரும் தண்டிக்கப்படமாட்டார்கள். அதாவது சட்டங்களை பின்நோக்கி ஆக்க முடியாது என்று புதிய அரசியல் அமைப்புச் சட்டம் கூறுகின்றது. ஆனால் இன்றைய அரசியல் அமைப்பின் கீழ் ஒருசிலர் மீது நடவடிக்கை எடுப்பதற்காக புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வருமுன்னர் குடியியல் உரிமைகளைப் பாதிக்கும் சட்ட மூலத்தைஅவசர அவசரமாக இம்மாதம் 16-ம் திகதிக்கு முன்பே பேரவையில் நிறைவேற்ற முயற்சிக்கிறீர்கள் இது அரசின் கொள்கைக்கே முரணானது.

இவ்வாறு நல்லூர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் தேசிய அரசுப் பேரவையில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

உள்ளூராட்சி அதிகார சபைகள் குடியியல் உரிமைகளை ரத்துச் செய்யும் சட்ட மூலத்தை நாம் வன்மையாக எதிர்க்கிறோம்,

கமிஷன் முன் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தாம் நிரபராதிகள் என வாதிட அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்காமல் இச்சட்டமூலத்தின் மூலம் தண்டனை அளிக்கப்படுகிறது.

அத்துடன் குற்றவாளிகள் தமக்குக் கிடைக்க இருக்கும் தண்டனையைத் தெரிந்து கொண்டு வாதிட அனுமதிக்கப்படவில்லை.

குறிப்பிட்ட ஆணைக்குழுவின் ஆணையாளர் எந்த நீதிபதி என்பதல்ல முக்கியம். அவர் கொடுத்த அறிக்கையைக் கொண்டே இங்கு சட்டமூலம் ஆக்கப்பட்டுள்ளது என்பதையே முக்கிய

(6-ம் பக்கம் பார்க்க)

# வவனியா-மட்டக்களப்பு திருமலையில் குடியேறுக

## வடபகுதி வாலிபர்களுக்கு நல்லூர் எம். பி. அழைப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழ் இளைஞர்களும், விவசாயிகளும், வடக்கை விட்டுப் புறப்பட்டு, திருக்கோணமலை, வவனியா, மட்டக்களப்புப் போன்ற விவசாயப் பூமிகளுக்குச் சென்று, புதிய நிலங்களைப் பண்படுத்திப் பயிரிடவேண்டும்."

நல்லூர் விவசாயப் பாடசாலையில நடந்த கலந்துரையாடலில், பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. எம்.சிவசிதம்பரம் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

கமக்காரர்கள், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், அரசாங்க அதிகாரிகள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் கூறியதாவது:

''எமது கிணறுகளிலிருந்து இன்றுபோல் தொடர்ந்துந்நீர் பெறப்பட்டால் இங்கு விரைவில் உவர்நீரையே நாம்காணக் கூடியதாக மாறும். இந்த அபாயத்திலிருந்து நாம் தப்புவதற்கு, எமது நீரைக் கவனமாகப் பயன்படுத்தக்கூடிய முறைகளை நாம் கையாள வேண்டும்.

'நமது சனத்தொகை பெருகுகிறது. ஆனல் பயிர் செய்யப்படக்கூடிய காணிகள் பெருகவில்லை. இதனலேயே உற்பத்தி வீழ்ச்சி ஏற்படுகின்றது. இதனை நீக்குவதற்கு இரு வழிகளே உண்டு. ஒன்று, நாம் புதிய காணிகளைப் பயிரிட்டுப் பயிர்ச்செய்கைப் பிரதேசத்தைப் பெருக்குவது மற்றையது, பயிரிடப்படும் நமது காணிகளில் அதிக விளைவைப் பெறக்கூடிய வழிவகைகளைக் கையாள்வது.''

### யோகேஸ் பேச்சு

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கூறியதாவது:

''விவசாயிகளும், பொது மக்களும் தங்கள் குறைகளை எம்மிடம் கூறுகின்றனர். நாம் அவைகளைக் கேட்டு, கொழும்பு சென்று, அமைச்சரிடம் அல்லது அவரின் செயலாளரிடம் கூறுகிறோம். அவர்கள் அமைச்சரவையின் ஆலோசனைக் கூட்டத்தில் கூறுவதாகத் தெரிவிக்கிறார்கள். அமைச்சரவையோ ஜனதிபதியிடம் கூறுவதாகச் சொல்கிறது. இப்படியான நிலை நீடிப்பதால் தான் பல பிரச்னைகளுக்கு எம்மால் தீர்வுகாண முடியாமலுள்ளது. இந்நிலை மாறி, மக்கள் பிரச்னைகளைக் கேட்டதும் உடனடியாக நாமே தீர்த்து வைக்கக்கூடிய ஒரு காலத்தைத் தோற்றுவிப்பது, தமிழ் மக்களின் கைகளில் உள்ளது. இதற்காக நாமனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும்.

''இங்கு பேசிய விவசாயிகள் பலர் இன்சூரன்ஸ் நட்டஈட்டுத்தொகை கடந்தமுறை முழு அளவில் வழங்கப்படவில்லை எனவும், கடந்த வருட விதை உருளைக்கிழங்கு விநியோகம் திருப்திகரமாக இல்லை எனவும் கூறினர்கள். இக்குறைபாடுகளை நீக்கத் தற்பொழுது பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் உதவவேண்டும்.''

### மிளகாய் 9-00 ரூபா

''இக்கலந்துரையாடலின் போது, மிளகாய் ஒரு ராத்தலுக்கு 9-00 ரூபாவும், வெங்காயம் ஒரு ராத்தலுக்கு ரூ 1-75 சதமும் கொள்வனவு விலையாக அரசாங்கம் வழங்க வேண்டுமெனத் தமது திணைக்களம் சிபார்சுசெய்திருப்பதாக விவசாயத் திணைக்களத்தின் வடபிரதேச அதிபர் திரு. சிவமூத்துலிங்கம் கூறினர்.

இக்கலந்துரையாடலில் தொடர்பு, கமக்காரருடன் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் சார்பில் திருவாளர்கள் அ. நித்தியானந்தன், சந்திரகுமார், விவேகானந்தன், ப. நித்தியானநதன், கிருபாகரன், துரைராசா, சிவராஜா, யோகராஜா, மனோசரானந்தன், இரத்தினேஸ்வரன், சிங்கி, பற்றிமாகரன் ஆகியோரும், கமநலச் சேவைப் பிரிவின் சார்பில் கதிர்காமநாதன், செல்வி அருள்மொழி ஆகியோரும், விவசாயப்போதனாசிரியர் ஆனந்தக்குமார் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிளும் கலந்துகொண்டனர். (கி,அ)

## ஜனதிபதி இன்று ஆரம்பித்துவைப்பார்

(கொழும்பு)

மதுறுஓயாத் திட்ட வேலைகளை, ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, இன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பித்துவைக்கிறார்.

இத்திட்டத்தின் பயனக 1 லட்சத்து 25 ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படும். 1 லட்சத்து 18 ஆயிரம் ஏக்கர் புதிய காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது, 45 ஆயிரம் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் இப்பகுதியில் குடியமாத்தப்படவுள்ளனர். (இ)

## செப்டம்பர் 3ல் 'அமிர்' வெளிநாடு செல்கிறர்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ. அமிர்தலிங்கம், அடுத்த மாதம் 3ந் திகதி வெளிநாடு செல்கிறர்.

ஜமேய்க்காவில் நடைபெறவிருக்கும் சர்வதேசப் பாராளுமன்றக் குழு மகாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் செல்லும் திரு. அமிர்தலிங்கம் முதலில் லண்டனுக்குச் செல்வார். திரு அமிர்தலிங்கத்துடன் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் செல்கின்றர்.

இவர்கள் இருவரும் அங்கிருந்து தமிழர்கள் வாழும் வேறு பல நாடுகளுக்கும் செல்வார்கள். (ம)

உள்ளூராட்சிக் கமிஷன் முன்

## மாஜிமந்திரிகள், எம்.பிக்கள் வாதாட சந்தர்ப்பம் இல்லை

### பேரவையில் சிறிமா கவலை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற ஊழல் தொடர்பாக விசாரணைசெய்த கமிஷன்முன்னிலையில் வாதாடுவதற்கு அரசாங்க ஊழியர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது, ஆனல் அதே கமிஷனல் விசாரிக்கப்பட்ட முன்னள் அமைச்சர்களுக்கும் எம். பிக்களுக்கும் தமது நிலை குறித்து வாதாட சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. இதே நேரத்தில் கமிஷன்முன் விசாரிக்கப்பட்ட சகலருக்கும் ஒரே தண்டனைதான் வழங்கப்படஉள்ளது. அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை காரணமாகவே இந்தப் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி

(6-ம் பக்கம் பார்க்க)

## அமிர் சார்பில் தர்மர்

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசரின் மறைவையொட்டி கொழும்பு கொட்டாஞ்சேனை சென் லூசியஸ் தேவாலயத்தில் நடைபெற்ற விசேட இரங்கற் பாடற்பூசையில் எதிர்க்ட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் சார்பில் மானிப்பாய் எம், பி திரு. வி. தர்மலிங்கம் கலந்து கொண்டார். (ம-இ)

தமிழ்மண் காக்கும் போராட்டம்:

## ஆகஸ்ட் 20-ல் திட்டங்கள் தயாரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம், இம்மாதம் 20ந் திகதி காலை 9-00 மணிக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனையில் நடைபெறும்.

செயற்குழுக் கூட்டம், முன்னர் கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. ஆனல் சில முக்கியமான பணிகள் காரணமாக, இப்போது யர்ழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

செயற்குழுக் கூட்டத்தில். ஆவரங்காலில் நிறைவேற்றப்பட்ட தமிழ் மண் காக்கும் போராட்டத்தில் இளைஞர்களையும், யுவதிகளையும் குடியேற்றுவதற்கு உடனடித் திட்டங்கள் தயாரிக்கப்படவிருப்பதாகவும், இதுவரை நூற்றுக்கதிகமான இளைஞர்கள் தமிழ் ஈழ எல்லைகளில் குடியேற விண்ணப்பித்துள்ள தாகவும் தெரிகிறது. (கெ-இ)

## பண்டிதமணிக்கு பாராட்டு விழா

இன்று, திங்கள் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பேராசிரியர் ஆ. வி. மயில்வானம் தலைமையில் நடைபெறும். பிரமுகர்கள் பலர் பேசுவார்கள். இசை நிகழ்ச்சி இடம்பெறும். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

பாராட்டுவிழாச் சபை

0048

## இறுதிநேர அறிவிப்பு; மக்கள் ஏமாற்றம்!

(யாழ்பாணம்)

கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரி நவீனவிழா திறப்பு விழாவுக்கு வந்தவர்கள் அங்குள்ள நவீனவாட்டையும், படுக்கைகளையும் பார்வையிட்டனர்.

பாப்பரசரின் மறைவையொட்டி சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியாவினல் கடந்த சனிக்கிழமை திறக்கப்படவிருந்த இவ் வைத்தியசாலையின் திறப்பு விழா அமைச்சர் விஜயம் ரத்துச் செய்யப்பட்டமையால் பின்போடப்பட்டது.

திறப்புவிழா அழைப்பு கிடைத்தவர்களில் பலர் திறப்பு விழா ஒத்திவைக்கப் பட்டதை அறியாமல் அங்கு வந்திருந்தனர். வைத்தியர் ஜெயவர்தன தலைமையில் ஒருகுழுவினர் வந்திருந்தனர், வடக்கிலுள்ள சில ஆயுர்வேத வைத்தியர்களும் வந்திருந்தனர் இவர்கள் நவீன வார்டைப் பார்வையிட்டபின் சென்றனர்.

திறப்புவிழாவிற்கானபெரும் ஏற்பாடுகளைச் செய்திருந்த ஆயுர்வேதக் கமிஷனர் திரு. பி. பி. வேரக்கொட, இறுதி நேரத்தில் திறப்புவிழா ஒத்திவைக்கப்பட்ட விஷயத்தை சகலருக்கும் அறிவிப்பதற்கான ஏற்பாட்டை செய்தபின் கொழும்பு சென்றர்.

அமைச்சர் விரைவில் இங்கு வந்து ஆயுர்வேத ஆஸ்பத்திரி நவீன வார்ட்டைத் திறந்து வைப்பார் எனவும் திரு. வேரகொட தெரிவித்தார். (அ)

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

City & Guilds, Electrical Engineering Part II & III, Refrigeration & Airconditioning Technology வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்; இன்ஸ்ரிரியூட் ஒவ்பிஸ்நெஸ் ஸ்ரடீஸ், 182, 1/4 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 0041

### விற்பனைக்கு

கோழி தீனி வகைகள், கோழி மருந்துவகைகள், விவசாய உரவகைகள், கிருமிநாசினிகள் ஆகியன சகாய விலையில் பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள். சரவண டிரேடர்ஸ், 174, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 0045

E N 3000 தொடர் இலக்க கார் (203x- பேச்சோ) (PEUGEOT) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். No 1, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். 0040

CLASSES

I C M A Chartered preliminary Institute of Bankers. Nov. 1978 exams. Rapid revision commencing19-8-78. 1.30 pm. Jaffna Education Centre, 22, Ramiah Chettiar Lane, Jaffna. 9993


## ஆசிரியருக்கு

### சைவசங்கம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''பாடசாலையிலே உண்மையான பற்றுக்கொண்டு இதன் வளர்ச்சிக்கு உழைத்துவருபவர் ஆசாரசீலரான திருவாளர் சுப்பிரமணியம், பிள்ளைகளுக்குச் சைவசமயத்தை உரிய முறையில் போதிப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறிவருகின்றவர்.''

இவ்வாறு வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. ஆ. இராமசாமி வித்தியாலய ஆசிரியர் திரு. சி. சுப்பிரமணியத்தைப் பாராட்டிப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

கொழும்பு விவேகானந்த சபை வளர்ந்தவருக்கென்று சைவசமயபாடத்தில் அகில இலங்கை ரீதியாக நடாத்திய உயர்தகைமைப் பரீட்சையில் பரிசுபெற்ற ஆசிரியர் திரு. சி. சுப்பிரமணியத்தை பாராட்டி மேற்படி வித்தியாலய வளர்ச்சிச் சங்கம் கௌரவித்தது.

கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் அதிபரின் தலைமையில் நடைபெற்றது. யாழ். வளாகத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு. ச. விநாயகமூர்த்தி குறிப்பிட்டதாவது:

''இவ்வித்தியாலய வளர்ச்சிக்கு ஆசிரியர் சுப்பிரமணியம் பல நிலைகளில் நின்று தொண்டாற்றிவருகின்ருர். ஆசிரியராக, ஒரு தொழிலாளியாக, ஆலோசகராக அவர் ஆற்றிவரும் சேவை அளப்பரியது'' என்ருர்.

சங்கீதபூஷணம்பி. சிவஞானசுந்தரம் வாழ்த்துப்பா பாடினர்.

இதனைத் தொடர்ந்து ஆசிரியர் சங்கத்தலைவர் திரு எம். கணேசன் தலைமையில் தேநீர் விருந்து ஒன்றும் நடைபெற்றது. ஆசிரியர் சுப்பிரமணியத்தைப் பாராட்டிக் கவிஞர் வி. கந்தவனம், திரு. [illegible] அரியரத்தினம் திரு ச. சபாநாயகம் ஆகியோர் உரைநிகழ்த்தினர் (உ)

## பேரவையில் சிந்தியவை

ஆனந்த தஸநாயக்கா (சு. க.):

இந்த நாட்டிலுள்ள கோழிக் கள்வர்களைப் பிடிக்கவேண்டும் என்று ஒரு சட்டமூலத்தை நீங்கள் கொண்டுவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

0 0 0

வீரசிங் கமல்லிமாராச்சி (ஐ. தே. க.):

எங்கள் அரசுதான் என்றும் இருக்கப்போகிறது என்ற பீலிக்ஸின் சொல்லை நம்பிக் கெட்டார் பௌஸி.

9 0 0

ஆனந்த தஸநாயக்கா:

பாப்பரசருக்கு துக்கம் அனுஷ்டிக்கும் இந்த நாளில் முதலாவது சட்டமூலத்தின் மூலம் பாதிக்கப்படும் 8 பேருக்கும் சேர்த்து துக்கம் அனுஷ்டிப்போம்.

ஜோசப் மைக்கல்பெரேரா (ஐ. தே. க.)-

ஒழுங்குப் பிரச்னை; உறுப்பினர் இக்கூற்றை வாபஸ் பெறவேண்டும். இக்கூற்றின்மூலம் உறுப்பினர் ஊழல்கள் புரிந்தோரை புனித பாப்பரசருடன் ஒப்பிடப்பார்க்கிருர்.

பிரதிச் சபாநாயகர்:

இதில் ஒழுங்குப் பிரச்னை இல்லை.

மைக்கல் பெரேரா:

இக்கூற்று கத்தோலிக்க மக்களை அவமதிப்பதாகும். அவரை வாபஸ் பெறச் செய்யாவிடின் நான் சபையிலிருந்து வெளியேறுவேன்.

பிரதிச் சபாநாயகர்:

கத்தோலிக்க மக்களை அவமதிக்கும்விதத்தில் உறுப்பினர் கூறியிருந்தால் வாபஸ் பெறவேண்டும்.

ஆனந்த தஸநாயக்கா:

அப்படி நான் கூறியிருந்தால் வாபஸ்பெறுகிறேன். ஆனல் அந்தத் தினத்தில் இவர்களுக்கும் அனுதாபப் படுவோம் என்றே நான் கூறினேன்.

0 0 0

அமைச்சர் ஷெல்டன் ஜயசிங்க:

தல்கொடபிட்டிய கமிஷன் நியமனம்பற்றி நான் 'ஹன்சாட்டி'லிருந்து வாசிக்கிறேன். (ஹன்சாட்டைப் புரட்டுகிருர்)

சிறிமாவோ:

நியாயமான வீட்டுவேலை செய்திருக்கிறீர்.

ஷெல்டன்:

நீங்களும் நானுமாக சேர்ந்து பல வீட்டு வேலைகள் செய்திருக்கிறேம்.

(சபையில் பலத்த சிரிப்பு)

(ம-இ)

## பாடசாலைகளுக்கு எம்.பி. திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பாடசாலைகளுக்குத் திடீர்விஜயம் செய்து, பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடன் உரையாடி பாடசாலையின் குறைநிறைவுகளைக் கேட்டறிந்து வருகின்ருர்.

கடந்த திங்கட்கிழமை வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கு திடீர் விஜயம் செய்த இவர், அதிபர் ஆசிரியர்களுடன் உரையாடி, பாடசாலையையும் சுற்றிப் பார்வையிட்டார். இந்த உரையாடலின்போது பல குறைபாடுகளையும் உன்னிப்பாகக் கேட்டறிந்து கொண்டார்.

ஆசிரியர் மாணவர்கள் ஈடுபட்டிருக்கும் விவசாயப் பண்ணை மாட்டுப்பண்ணை கோழிப்பண்ணை என்பவற்றைப்பார்வையிட்டு அவை நல்ல முறையில் செயல்படுவதைப் பாராட்டினர் ஆசிரியர் பெற்றேர் பழைய மாணவர் ஒருங்கிணைந்து செயல்படுவது பாராட்டப்படவேண்டியது என்றும் இக்கல்லூரியின் தேவைகள் குறித்துக் கல்வியமைச்சுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாகவும் திரு சி. கதிரவேலுப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## பண்டிதமணிக்கு இன்று விழா

# புலவர் குலக்கொழுந்து பண்டிதர் ஐயா

-- அ. பஞ்சாட்சரம் --



''சுவைப் பொருளோடு
சுவைப்போன் என்னுமிகு
தொன்னிலத்து
நவையறு செஞ்சொற்
கவிச்சுவை தோன்றிட
நாவெடுத்து
சுவையிது வென்று சுவைதரு
சொற்கொண்டு சொல்லி
யெம்முன்
இவைதுவை யாகக்
கொழிக்கும் புலவர் குலக்
கொழுந்தே''

என்ருர். இரசிகரான காலஞ்சென்ற திரு. க. அருள்நந்தி.

சுவைபடப்பேசியும் எழுதியும் பல்லாயிரம் மக்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்ட பண்டிதர் ஐயா திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த காலம் பொற்காலம். உப அதிபர் பொ. கைலாசபதியும் மூதறியர் மயிட்டிசி. சுவாமிநாதனும் பண்டிதர் ஐயாவுமாகத் திருநெல்வேலியை- திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை அலங்கரித்தகாலம் அது. பலதுறைகளும் கைவந்த இவர்கள் சிறந்த கல்விச் சூழலின் மத்தியில் வாழ்ந்து நாட்டுக்கே வழிகாட்டியானுர்கள். இவர்களைப் பின்பற்றியவர் அநேகர். சைவதமிழ்க் கோயில் என வருணிக்கப்பட்டது திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை.

அங்கு முப்பது ஆண்டுகள் வரை தொண்டுசெய்த பண்டிதர் ஐயா உத்தியோகத்தில் ஓய்வுபெற்றபோதிலும் கல்வி உழைப்பில் ஓய்வுபெருது சைவத் தமிழ்த்தொண்டு செய்துவருகிருர். இதனுல் திருநெல்வேலி திருநல்வேலியாயிற்று என்ருர் பேராசிரியர் ஒருவர்.

இவ்வாறு பலராலும் பல சந்தர்ப்பங்களிலும் பாராட்டப் பெற்றபண்டிதர் ஐயாவுக்கு இலங்கைப் பல்கலைக் கழகம் 'இலக்கிய கலாநிதி' என்னும் உயர்விருதினை வழங்கியுள்ளது. தமிழறிஞர் உ. வே. சாமிநாதையருக்கு டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்தபோது அன்னுருக்கு நாட்டில் பெரும் பாராட்டு வைபவங்கள் நடந்ததுபோல பண்டிதர் ஐயாவுக்கும் ஈழத்தின் பல பகுதிகளிலும் பாராட்டு வைபவங்கள் நடந்தன. இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பாராட்டு நிகழ்ச்சி பொதுமக்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து தமது உளமகிழ்ச்சியை எடுத்துக்காட்டும் சிறப்புவிழாவாகும்.

பண்டிதர் ஐயாவின் உயர் தொண்டினைக்கௌரவிக்குமுகமாக அப்போதுபல்கலைக் கழகத் தமிழ்த்துத்துறைத் தலைவராயிருந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை இலக்கிய வழி என்ற பண்டிதர்ஐயாவின் நூலை க. பொ. த. உயர்வகுப்புக்குப் பாடபுத்தகமாகச் சிபார்சு செய்தார். இதற்கு ஜனுப் எம். எம். உவைஸும் உதவியாகவிருந்தார். இந்நூல் இரண்டாவது தடவையாக மீண்டும் குறித்த வகுப்புக்குப் பாடபுத்தகமாக்கப்பட்டுள்ளது. பண்டிதர் ஐயாவுக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் 'இலக்கிய கலாநிதி' என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்த இச்சந்தர்ப்பத்தில் இலக்கியவழியை மீண்டும் பாடபுத்தமாகத் தெரிவுசெய்தபேராசிரியர்களை. விசேஷமாக இவ்வழியில் உழைத்த பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனை நாம் பாராட்டாமலிருக்கமுடியாது.

சந்தபுராணம் வைதிக சைவ பொக்கிஷம்' என்பார் பண்டிதர் ஐயா. தக்ஷ்க காண்டத்திற்குப் பண்டிதர் ஐயா எழுதிய உரையை வெளியிட்டு உயர்தொண்டு புரிந்தது இலங்கைப் பல்கலைக்கழகப் பேராதனை வளாக இந்து மாணவர் சங்கம் இம்மன்றத்தின் முயற்சிக்கு அச்சாணியாய் இருந்து தொண்டு புரிந்தவர் காலஞ்சென்ற பேராசிரியர் திரு. பே. கனகசபாபதியாவர். இவர்கள் அருமுயற்சியால் குறிஞ்சிக்குமரன் கோயில் வளர்ந்தது. கந்தபுராணம் வளர்ந்தது.

கந்தபுராண தக்ஷ்ககாண்டம் உரை நூல் விழாவில் இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலரும் பங்கு கொண்டு தலைமை தாங்கியும் பொன்னுடை போர்த்தியும், பொற்கிழி வழங்கியும் கௌரவித்தார்கள். இவற்றையெல்லாம் நோக்குமிடத்துபல்கலைக் கழகமும் அதன் பேராசிரியர்களும் பண்டிதர் ஐயாவின் தூய நற்றொண்டை எப்பொழுதோ பாராட்டத்தொடங்கிவிட்டனர் எனலாம்.

இலங்கைப் பல்கலைக்கழக விசேஷ பட்டமளிப்பிழ



அ. பஞ்சாட்சரம்

(31-5.1978) முதல் இடம் பெற்ற ஈழத்தின் முதல் தமிழறிஞர் - முதுபெருந்தமிழறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை என்று இன்று உலகம் பாராட்டுகின்றது. இதற்கு முன்னேடியாசப் பலர் உழைத்தாலும் கணிசமான பங்கு பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனைச் சார்ந்தது எனலாம்.

எண்பதாவது வயதில்காலடி எடுத்துவைத்துள்ள பண்டிதர் ஐயா நீடூழிவாழ எல்லாம் வல்ல விநாகப்பெருமான் திருவருள் புரிவாராக.

## லொறி இறக்குமதி

(கொழும்பு)

லண்டனில் உள்ள 'லேலண்ட்' நிறுவனத்திடமிருந்து 57 லட்சம் ரூபா பெறுமதியான லொறிகளை இலங்கையைச் சேர்ந்த இரு விநியோகஸ்தர்கள் இறக்குமதி செய்கிருர்கள். இவை கப்பலில் ஏற்றப்பட்டுவிட்டன எனஅறிவிக்கப்படுகிறது. (உ)


யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை

இலண்டன் உயர்தர (London A Level)
விஞ்ஞான கலை வகுப்புக்களிற்கு
(ஆங்கில மூலம்) கற்பிக்க முழு நேர அல்லது பகுதி நேர
ஆசிரியர்கள் தேவை.
அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.
அதிபர்.
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை. 0050

யாழ்ப்பாணக் கல்லூரி
அளிக்கும்
கர்னுடக இசை விருந்து
நடத்துபவர்
செல்வி M. பிரேமிலா M. A.
(Phil) M. A. (Music)
வீரசிங்கம் மண்டபத்தில்
2-9-78 சனிக்கிழமை பி. ப. 6-00 மணிக்கு
நடைபெறும்.
ரிக்கட் விபரம்: ரூபா 100/- ரூபா 25/- ரூபா 10/-
கிடைக்கும் இடம்
லங்கெம் இலங்கை (லிமிற்றட்)
219, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0049

# "சுதந்திரத்திற்கான புனிதப் போரில் முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முன்வருக!"

## தமிழ் தேசிய இனத்திற்கும் தமிழ் இளைஞருக்கும் அறைகூவல்

### கூட்டணி வட்டு. மாநாட்டுத் தீர்மானம்

புதிய அரசியலமைப்புச் சட்டம் பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அந்த விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கலந்துகொள்ளமாட்டார்களென்பதற்குரிய காரணங்களைவிளக்கி எதிர்க் கட்சித்தலைவரும், காங்கேசன்துறைப் பிரதிநிதியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் நீண்ட உரை நிகழ்த்தினார். அவரது உரையின் ஒரு பகுதி 'ஈழநாடு' இதழில் ஏற்கனவே தொடர்ந்து வெளிவந்துள்ளது. சென்ற சனிக்கிழமை 'ஈழநாடு' இதழில் வெளிவந்த திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சின் இறுதியில் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் பேரவையில் வாசித்துக் காட்டுவது பொருத்தம் எனக்கூறி வாசித்தார். வட்டுக்கோட்டைத் தீர்மானம் இங்கு இன்று தரப்படுகிறது. (ஆ-ர்)

சரித்திரத்திற்கு முற்பட்ட காலம்முதல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளவை நதியிலிருந்து சிலாபம் வரைக்கும், தெற்குமேற்குப்பகுதிகளிலும், மத்திய பிரதேசத்திலும் சிங்களமக்களும், வடக்கு, கிழக்குப்பிரதேசங்களில் தமிழ் மக்களும் வாழ்ந்து இந்நாட்டின் ஆளுகையைச் சிங்களத் தேசியஇனமும், தமிழ்த்தேசிய இனமும் தமக்குள் பகிர்ந்து வந்தபடியாலும்,

சிங்கள இராச்சியங்களோடு தொடர்பற்றவகையில் 1619ம் ஆண்டு போர்த்துக்கீசரால் தமிழ்இராச்சியம் யுத்த களத்தில் தோற்கடிக்கப்பட்டுக்கைப்பற்றப்பட்டு, அவர்களிடமிருந்து ஒல்லாந்தராலும் பின் ஆங்கிலேயராலும் அதேவிதமாக வெற்றிகொள்ளப்பட்டபடியாலும்,

சிங்கள இராச்சியங்களின் பிரதேசங்களையும், தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களையும் வேறு வேறாகஆட்சிசெய்து வந்த ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் 1833ம்ஆண்டு கோல்புறாக் ஆணைக்குழுவின் சிபார்சுப்படி தம் நிர்வாகவசதிகருதி வலுக்கட்டாயமாக இப்பிரதேசங்களை ஒன்றாக இணைத்தபடியாலும்,

ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிப்பதற்கானவிடுதலைக்கிளர்ச்சியில் தமிழ்த்தலைவர்கள் முன்னோடிகளாக உழைத்து இறுதியில் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தபடியாலும்,

மேற்கூறப்பட்ட சரித்திர உண்மைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்ற அடிப்படையில் முழு நாட்டின்மீதுமான அரசியலதிகாரம் சிங்களத்தேசிய இனத்தின்கைக்கு மாற்றப்பட்டு அதனால் தமிழ் தேசிய இனம் அடிமை இனமாகத் தாழ்த்தப்பட்ட படியாலும்

சுதந்திரம் பெற்ற நாள் முதல் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எல்லாம் சிங்கள மக்களின் தீவிர இனவாதத்தை தூண்டி வளர்த்துத் தம் அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களுக்குப் பாதகமாக

1. தமிழ் மக்களில் அரைப் பங்கினரின் குடியுரிமை,வாக்குரிமைகளைப் பறித்து அதனால் பாராளுமன்றத்தில் தமிழரின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கும்.

2. திட்டமிட்டு அரசாங்க உதவியுடன் நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களாலும், இரகசியமாக ஊக்கிவிடப்பட்ட சிங்களக் கள்ளக் குடியேற்றங்களைச் சட்டபூர்வமாக அங்கீகரித்தலாலும், பண்டைய தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களில் சிங்கள மக்களை நுழைத்து தமிழரைத் தம் சொந்ததாயகத்திலேயே சிறுபான்மையினராக்குவதற்கும்,

3. இலங்கை முழுவதும் சிங்களம் மாத்திரமே ஆட்சிமொழியாக்கி தமிழர் மீதும், தமிழ் மொழி மீதும் தாழ்வு முத்திரையைப் பொறிப்பதற்கும்,

4. குடியரசு அரசியல் அமைப்பில் பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை அளித்து இந்நாட்டில் இந்து, கிறீஸ்தவ, இஸ்லாமிய மக்களை இரண்டாந்தரத்திற்குத் தாழ்த்துவதற்கும்.

5, கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, நிலப்பங்கீடு, பொருளாதார வாழ்வின் சகல துறைகளிலும் தமிழ் மக்களுக்கு சம சந்தர்ப்பத்தை மறுத்தும், பெருமளவிலான கைத்தொழில்கள் அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களைப் புறக்கணித்தும் இலங்கையில் தமிழ் மக்களின் வாழ்க்கையே ஊசலாடும் நிலையை ஏற்படுத்துவதற்கும்.

6. இலங்கையில் தமிழ் மொழியையும், பண்பாட்டையும் வளர்க்கும் சந்தர்ப்பங்களை மறுக்கும் அதே நேரத்தில் தமிழ்நாட்டுக் கலாச்சாரத் தாயூற்றோடு உள்ள தொடர்பையும் திட்டமிட்டுத்துண்டித்துக் கலாச்சார இனக்கொலையைநோக்கி ஈழத்தமிழ் மக்களைத் தள்ளுவதற்கும்,

7.1956ம் ஆண்டுகொழும்பிலும், அப்பாறை முதலிய இடங்களிலும் நடந்தது போன்றும், 1958ம் ஆண்டு நாடு முழுவதும் மிகப்பெருமளவில் நடந்ததுபோன்றும் 1961ம் ஆண்டுவடக்கு கிழக்கு மாகாணங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இராணுவக்காட்டாட்சி போன்றும், 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒன்பதின்மர் உயிர்துறக்கக் காரணமான ,காவல்படையின் காரணமற்ற தாக்குதல்போன்றும், 1976ம் ஆண்டில் புத்தளத்திலும், இலங்கையின்வேறு பல பாகங்களிலும், காவல் படையினரும், சிங்கள வகுப்புவெறியரும், தமிழ்பேசும் முஸ்லிம்கள் மீது நடத்திய தாக்குதல் போன்றும், தமிழ்பேசும் மக்கள் மீது வகுப்புவெறிப் பலாத்கார நடவடிக்கைகளையும், பயமுறுத்தல் நடவடிக்கைகளையும் அனுமதித்தும், கட்டவிழ்த்துவிட்டும், நமக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தமிழ்பேசும்மக்கள் எதிர்த்து நிற்கும் ஆண்மையை அழித்துப் பீதியை ஏற்படுத்துவதற்கும்,

8. தமிழ் இளைஞர்களை எவ்வித நியாயமோ, நீதிவிசாரணையோ இன்றித்தாக்கியும், சித்திரவதைசெய்தும், வருடக்கணக்கில் சிறைச்சாலைகளில் அடைத்து வதைத்தும்,

9. எல்லாவற்றிற்கும் மேலாக அவசரகாலச்சட்டத்தின் கீழ், சுதந்திரமாக விவாதிக்கும்சந்தர்ப்பமின்றி,பிரஜா உரிமைச்சட்டங்களினால் பிரதிநிதித்துவ விகிதாசாரமே மாற்றப்பட்டுச் சிங்களப்பெரும்பான்மைக்கு, விகிதாசாரத்துக்கும் கூடியபிரதிநிதித்துவம் கொண்ட பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக்கி தமிழ் மக்களுக்கு முந்திய அரசியல் அமைப்பின் கீழ் எஞ்சியிருந்தசிறு பாதுகாப்புக்களையும் நீக்கி அடிமைத்தளையை இறுகப் பூட்டிய குடியரசு அரசியல் அமைப்பை அவர்கள் மீது திணிப்பதற்கும்

தமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி வருவதாலும்.

பல்வேறு தமிழ் அரசியற் கட்சிகளும் தமிழ் மக்களின் உரிமை வென்றெடுப்பதற்கு அரசாங்கங்களோடு ஒத்துழைத்தும், பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியும் கிளர்ச்சி செய்தும் தமிழ் மக்கள் தன்மானத்தோடு வாழக்கூடிய ஆகக்குறைந்த அரசியல் உரிமைகளையாவது நிலைநாட்டுவதற்கு அடுத்தடுத்து வந்த சிங்களப் பிரதமர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களும் பயனற்றுப் போனபடியாலும்.

ஒற்றையாட்சியில் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகங்களை நசுக்காதவாறு பாராளுமன்றத்தில் சமபல பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் எடுத்துவரும் முயற்சி தோல்வி கண்டதோடு எந்தவொரு சமூகத்திற்கும் சுமுகமான சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தடைசெய்யும் பொருட்டு சோல்பரி அரசியல் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 29-வது விதியின் அற்ப பாதுகாப்பும் குடியரசு அரசியல் அமைப்பின்கீழ் நீக்கப்பட்டபடியாலும்

ஐக்கிய இலங்கை சமஷ்டிக் குடியரசின் ஓர் அங்கமாக ஒரு சுயாட்சி தமிழ் அரசை நிறுவுவதன் மூலம் தமிழ் மக்களின் தனித்துவத்தைக் காக்கும் அதேவேளையில் நாட்டின் ஒற்றுமையைப் பேணும் பொருட்டு இலங்கைத் தமிழரசுக்கட்சி அரசியல் நிரணய சபைக்குச் சமர்ப்பித்த திட்டங்கள் அவற்றின் தகுதி ஆராயப்படாமலே முழுதாக நிராகரிக்கப் பட்டபடியாலும்,

வல்வெட்டித்துறையில் 1971 பெப்ரவரி 7-ந் திகதி கூடிய அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளின் மாநாட்டில் எடுக்கப்பட்ட ஏகோபித்த ஒன்பது அம்ச முடிவுகளின்படி அரசியல் நிர்ணய சபையின் அடிப்படைத் தீர்மானங்களுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் அரசியல் கட்சிகளாலும் இன்று ஆளும் கட்சியில் இருட்போர் உட்படத் தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராலும் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் அரசாங்கத்தினாலும் அரசியல்நிர்ணய சபையாலும் முற்றாக நிராகரிக்கப்பட்டபடியாலும்;

1966ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டவிதிகளையாவது அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்யும்பொருட்டும் மொழி உரிமை, மதஉரிமை, அடிப்படை உரிமைகள் பற்றியும் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அமைப்புச்சட்ட மூலத்திற்கான திருத்தங்கள் எல்லாமே தோற்கடிக்கப்பட்ட காரணத்தினால் மிகப் பெரும்பாலான தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்நிர்ணயசபையைப் பகிஷ்கரித்தபடியாலும்;

1972ம் ஆண்டு மே 22ம் திகதி அங்கீகாரம்பெற்ற குடியரசு அரசியல்அமைப்பை நிராகரித்த தமிழர் கூட்டணி 1972 யூன் 25ந் திகதி பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் ஆறு அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்து அவற்றின் அடிப்படையில் அரசியல்அமைப்பைத் திருத்தித் தமிழ்தேசிய இனத்தின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கு மூன்று மாத அவகாசம் அளித்து அரசு அவ்வித நடவடிக்கை எடுக்கத் தவறினால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்தேசிய இனத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் வென்றெடுக்க தமிழர் கூட்டணி அரசுக்கு எதிராகச் சாத்வீக நேரடி நடவடிக்கையில் இறங்குமென அரசாங்கத்திற்கு அறிவித்தபடியாலும்;

நாட்டின் ஒற்றுமைக்கு பாதிப்பற்றமுறையில் தமிழ் தேசியஇனத்தின் உரிமைகளுக்கு அரசியல் சட்டரீதியான அங்கீகாரம்பெறுவதற்கு தமிழர் கூட்டணியின் இந்த இறுதிமுயற்சியைப் பிரதமமந்திரியும் அரசாங்கமும் உதாசீனம் செய்து உதறித் தள்ளியபடியாலும்;

தமது அரசியல் அமைப்புக்குத் தமிழ்மக்களின் ஆதரவுண்டு என்ற அரசின் கூற்றை நிலைநாட்டுவதற்குத் தேசிய அரசுப்பேரவையில் தமது ஸ்தானத்தைத் துறந்து ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்துவதற்குத் தமிழர்கூட்டணித் தலைவர் அளித்த சந்தர்ப்பத்தை வேண்டுமென்றே இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒத்திவைத்துக் காங்கேசன் துறைத் தொகுதித் தமிழ் வாக்காளரின் ஜனநாயக உரிமையைப் புறக்கணித்தபடியாலும்;

1975 பெப்ரவரி 6ம் திகதி நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கேசன்துறை வாக்காளர் அதிக பெரும்பான்மை வாக்குகளால் சிங்கள அரசாங்கத்தினால் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பை நிராகரித்தது மாத்திரமின்றி திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கட்கும் அவர் மூலம் தமிழர் கூட்டணிக்கும் சுதந்திரஇறைமையுள்ள, மதச்

(5-ம் பக்கம் பார்க்க)

## அடியார்க்கின்பந்தாராய்

நல்லைப் பதியிலுறை குகனே-நறுங்
கனியாய் விளங்கும் திருவே!
எல்லாம் வல்ல இறையே-எழில்
பொங்கும் ஞான ஒளியே!

வண்ண மயில்மீ தேறி-வலம்
வந்தே எமக்கு அருள்வாய்!
எண்ணில் லாத அடியார்-நின்னை
ஏத்தும் வகையைப் பாராய்!

முருகா முருகா வென்றே-உன்
நாமம் சொல்லித் தினமும்!
உருகி மனத்தால் நினைக்கும்-பல
அடியார்க் கின்பம் தாராய்!

பாடிப்பாடித் தினமும்-நின்
பாதம் பணிந்தே நிற்கும்
அடியார்க் கருளைப் பொழிந்தே-அவர்
துன்பம் பலவைத் தீர்ப்பாய்!

- சி. க. பாலசுப்பிரமணியம்

## ரமலானின் சிந்தனைகள்

ரமலான் மாதம் எத்தகையதெனின்; மனிதர்களுக்கு நேர்வழிகாட்டக்கூடியதும், நேர்வழியையும் சத்திய அசத்தியத்தைப் பகுத்துக்காட்டக்கூடிய ஆதாரங்களைக்கொண்டதுமான குர்ஆன் அ(ம்மாதத்)தில் இறக்கியருளப்பட்டது. எனவே உங்களில் எவர் அம்மாதத்தைப் பெறுகிறாரோ, அப்பொழுது அதில் அவர் நோன்பு நோற்றுவிடவும். தவிர எவர் நோயாளியாகவோ அன்றி பிரயாணத்திலோ இருந்தால் (அவர் நோன்பை விடுவதற்கு அநுமதியுண்டு. எனினும் விடுபட்ட நோன்புகளை) அப்பால் வேறு நாட்களில் எண்ணி (நோற்று)விடவேண்டும். உங்களுக்கு இலகு அளிப்பதை அல்லாஹ் நாடுகிறான். மேலும் உங்களுக்கு அவன் சிரமமளிப்பதை விரும்பவில்லை. இன்னும் நீங்கள் (விட்டுவிட்ட நோன்புகளின்) எண்ணிக்கையை (நோன்பு நோற்பதன்மூலம்) பூர்த்திசெய்வதற்காகவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதன்மீது அல்லாஹ்வை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும் (அவன் உங்களுக்கு அளித்த அருட்கொடைகளுக்கு) நீங்கள் நன்றியைக் காட்டுவதற்காகவுமே. (இச்சலுகைச் சட்டங்களை உங்களுக்கு அவன் வழங்கியிருக்கிறான்.)

அல்குர்ஆன்:-அல்பகரா 2: 185

தொகுப்பு: ஏ. ஸி. எம். மஸ்ஹூர் - யாழ்நகர்.

சீன-ஜாப். உடன்படிக்கை:

# "உலக சமாதானம் வலுப்படும்"

— பிரதமர் புக்கூடா

# 'தெ.கி ஆசியாவுக்கு ஆபத்து'

— ரஷ்யா கண்டனம்

டோக்கியோ, ஆக. 13

சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள சமரஸ உடன்படிக்கை உலக சமாதானத்தை வலுப்படுத்தும் என்று ஜப்பானியப் பிரதமர் திரு. புக்கூடா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பீக்கிங்கில் செய்துகொள்ளப்பட்ட இவ்வுடன்படிக்கைக் காட்சியை திரு. புக்கூடா தொலைக்காட்சி மூலம் பார்த்தார். இதேவேளை இவ்வுடன்படிக்கை குறித்துசோவியத் யூனியன் கண்டனம் தெரிவித்துள்ளது.

நெருக்கடி நிலையைத் தளர்த்துவதற்கு முரணாக இது அமைந்துள்ளது என்று சோவியத் யூனியன் தனது கண்டனத்தில் கூறியுள்ளது.

தென்கிழக்காசியாவுக்கு ஆபத்துவிளைவிப்பதாக இதுஅமையும் என்றும் அது மேலும் கூறியிருக்கிறது. (உ)

## கண்டனம்

சென்னை, ஆக. 13

வட இந்திய மாநிலங்களில் தென்னிந்திய மொழிகள் கற்பிக்கப்படுவதில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. ஓ. வி. அழகேசன் கண்டனம் தெரிவித்துள்ளார். (உ)

"இன்னலுற்றவேளைகளில்

# ரஷ்யாபாரதத்திற்கு அளித்த உதவிகளைமறப்பதற்கில்லை'

## தமிழக மந்திரி கூறுகிறார்

சென்னை, ஆக. 13

"கஷ்டமேற்பட்ட பலசந்தர்ப்பங்களில் பாரதத்திற்கு சோவியத்யூனியன் அளித்த உதவிகளை மறப்பதற்கில்லை."

இவ்வாறு தமிழக மந்திரி திரு எஸ். இராமச்சந்திரன் நன்றிகூர்ந்தார். சென்னையில் பாரத - சோவியத் நட்புறவுக் கழகம் நடத்திய இந்திய சுதந்திரதின விழா. கழக ஏழாவது ஆண்டு நிறைவு விழாவில் அவர் கலந்துகொண்டு பேசுகையில் இவ்வாறு கூறினார்.

சோவியத் யூனியனுக்கும் பாரதத்திற்கும் இடையில் நட்புறவு வலுப்பட்டு வருகிறது என்று இவ்விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் பாரத சோவியத் தூதரக அதிகாரி திரு. பார்க்கஸ் கூறினார்.

## "பாடசாலைகளுக்கு இடவசதி வேண்டும்"

(சித்தன்கேணி)

''ஒவ்வொரு பாடசாலைக்கும் இடவசதி, இன்றியமையாததாகும். இடவசதி, கட்டடவசதி, சுகாதார வசதி விளையாட்டுமைதான வசதி முதலியன போதியளவு இருந்தால்தான் மாணவர்கள் இலகுவாகப்படிக்கலாம். எமது பாடசாலையில் இந்த வசதிகள் மிகக் குறைவாக இருப்பதனாலேயே மாணவர்களது கல்வி வளர்ச்சி குன்றிவருகின்றது. பாடசாலையின் வளர்ச்சி மாணவர்களது பரீட்சை முடிவில்தான் தங்கியுள்ளது. மாணவர்கள் பரீட்சைகளில் திறமைகாட்டுவதற்கு இந்த வசதிகளைச் செய்துகொடுக்க பெற்றோர் முன்வரவேண்டும்''

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு கனிஷ்ட மகாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது தலைமையுரை நிகழ்த்திய அதிபர் திரு. வே. தம்பையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## ஆயுள்வேத மருந்துகளுக்கு விலைகுறைப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண விற்பனைநிலையத்தில் விற்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட சகல மருந்துச் சரக்குகளுக்கும் பத்துவீதம் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

யாழ். கிளை முகாமையாளர் டாக்டர் க. மருதையினா ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. பி. பி. வேரகொடவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக இவ்விலைக் குறைப்பு அமுலுக்கு வருகிறது.

பாப்பரசர்

## இறுதிச் சடங்கில் கார்ட்டர் மனைவியும் பிரசன்னம்

வத்திக்கான், ஆக. 13

பரிசுத்த பாப்பரசர் ஆறுவது சின்னப்பரின் மரணச் சடங்குகள் சென். பீட்டர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்றபோது அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரின் மனைவி ரொஸலினும் கலந்துகொண்டார்.

ஸாம்பியா ஜனாதிபதி திரு. கெனத் கௌண்டா, ஐ. நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் உட்பட பல உலகத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர், (உ)

## தலைநகரில் பெருமழை: போக்குவரத்து சீர்குலைவு

புதுடில்லி, ஆக. 13

புதுடில்லியில் கடந்த 84 வருடங்களில் இல்லாதவாறு தொடர்ந்து 2 நாட்கள் பெருமழை பெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு 15 அங்குல மழை பெய்துள்ளது. பெருவெள்ளம் காரணமாக வீதிப்போக்குவரத்தும் தொலைபேசித் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

## "இந்திய வானொலி தேசிய ஐக்கியம் வளர்க்கிறது"

### தமிழக ஆளுநர் பாராட்டு

சென்னை, ஆக. 13

''அகில இந்திய வானொலி பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் மூலம் நாட்டின் பல்வேறு மக்களிடையேயும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்து வருகிறது.''

இவ்வாறு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கூறினார்.

பாரதசுதந்திரதினவிழாவையொட்டி சென்னையில் சென்னை வானொலி நிலையம் நடத்திய சிறப்பு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறுபாராட்டுத் தெரிவித்தார்.

பாரதத்தின் கலாச்சார சிறப்புகளை வெளிநாட்டாருக்கு உணர்த்தவும் இந்திய வானொலி உதவுகிறது. இன்றுகுக்கிராமங்களில்கூட மக்கள் வானொலியை ஆவலுடன் விரும்பிக் கேட்கிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

இளைய ராஜாவின் மெல்லிசை உட்பட கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ)

## ஹிந்தி எதிர்ப்பு மாநாடு

சென்னை, ஆக. 13

அனைத்துக்கட்சிகளின் இந்தி எதிர்ப்பு மாநாடு நாளைமறுதினம் சென்னை பெரியார்திடலில் தாழமுத்து நடராஜன் அரங்கில் நடைபெறும்.

மாநாட்டின் வரவேற்புரையை திரு.வீரமணி நிகழ்த்துவார். இம்மாநாடு, செட்டிநாட்டரசர் ராஜமுத்தையா செட்டியார் தலைமையில் நடைபெறும்.

முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், ஜனாப் ஏ. கே. அப்துல்ஸமது, குமரி அனந்தன், புலவர் பெருஞ்சித்திரனார், குன்றக்குடி அடிகளார் உட்பட மாநாட்டில் பலர் உரையாற்றுவா.(கெ-உ)

# 'இந்தோ. அரசுக்கு சீனர் குழிபறிப்பு'

ஜாகர்த்தா, ஆக. 13

''சீன வம்சாவழிப் பிரஜைகள் இந்தோனேஷியாவிலும் சட்டவிரோதமாக பிரவேசித்து குடியேறுவது இந்தோனேஷிய அரசுக்கு பெரும் பிரச்னையாக உள்ளது. போலி பாஸ்போட்டுக்களுடன் சீனர்களை இந்தோனேஷியாவினுள் அனுப்புவதற்கு ஹொங்கொங் ஒருமுக்கிய கேந்திரமாகப் பயன்படுத்தப்படுகிறது'' என இந்தோனேஷிய இராணுவப் பத்திரிகையான பெரிட்டா புவானா எழுதியுள்ளது.

''உல்லாசப் பிரயாணிகளாகவும் மாலுமிகளாகவும் வர்த்தகர்களாகவும் இந்தோனேஷியாவிலுள் பிரவேசிக்கும் சீனர்கள் நாட்டின் முக்கிய நகர்களில் குடியேறி, இந்தோனேஷிய அரசுக்கு எதிரான குழிபறிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்தோனேஷிய அரசுக்கு எதிராக ஒரு ஆயுதப் போராட்டம் நடாத்தப்பட வேண்டும் என இவர்கள் பிரசாரஞ் செய்கின்றனர்; பிரிவினைவாதிகளின் நடவடிக்கைகளுக்கு உதவி செய்து வருகின்றனர்'' என மேற்படி பத்திரிகை மேலும் எழுதியுள்ளது. தற்போது இந்தோனேஷியாவில் 30 லட்சம் சீனர்கள் இருக்கின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

"ஹிந்தித்திணிப்புக்கு

# ராஜ்நாராயண் தலைமையில் ஹிந்தி வெறியர்காரணம்"

## நம்பூதிரிபாட் கண்டனம்

அலகபாத், ஆக, 13

இந்தித் திணிப்புக்கு உண்மையான காரணம் முன்னாள் மத்திய அமைச்சர் ராஜ்நாராயணின் தலைமையில் உள்ள இந்த வெறியர்கள் கூட்டம் தான். இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க முயலும் இந்திவெறியர்களை இந்தி பேசாத மக்கள் பலமாகக் கண்டிக்கவேண்டும்.

இவ்வாறு இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ஈ. எம். எஸ் நம்பூதிரிபாட் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அவர் செய்தியாளர்கள் மத்தியில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இந்தி தனது இயற்கையான வளர்ச்சியின் மூலமே இந்தியாவின் தொடர்பு மொழியாக முடியும். மாறாக இந்திபேசாத மக்கள்மீது அதைத் திணிக்க முயற்சி நடைபெறுகின்றது.

இந்திமொழி பேசாதவர்கள் மத்தியில் இந்தியைப் பலவந்தமாகத் திணிக்கமுயன்றால் இந்தி திரைப்படங்களைக் கூட பார்க்காமல் கடும் எதிர்ப்பினை காட்டவேண்டி வரும்'' என்றார். (கெ-உ)

## சிலிமந்திரி சீனா செல்வார்

பியோனொஸ்எயர்ஸ், ஆக. 13

சீன வெளிநாட்டமைச்சர் ஹுவாங் ஹுவாவினது அழைப்பின் பேரில் சிலி இராணுவ ஆட்சியின் வெளிநாட்டமைச்சர் ஹேர்னன் கியூபில்வொஸ் அக்டோபர் மாதத்தில் பீகிங் செல்லவுள்ளார் என சிலி வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

''தற்போது இரு நாடுகளுக்குமிடையில் நிலவிவரும் நல்லுறவுகளை மேலும் விஸ்தரிப்பதப்படுத்தும் மார்க்கத்தில் இவ் விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்'' என சிலி வெளிநாட்டமைச்சு விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது. (உ)

## 77-வது பிறந்தநாள் 77 லட்சம் பரிசு

புதுடில்லி, ஆக. 13

முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங்கின் 77 வது பிறந்த தினத்தையொட்டி அகில இந்திய விவசாயிகள் சம்மேளனம் 77 லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

திரு சரண்சிங்கின் பிறந்தநாளான டிசம்பர் மாதம் 23ம் திகதி இந்நிதி அவருக்கு வழங்கப்படும். (செ-கு)

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
**NOT NOW COMRADE**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
விஜயகுமார்
கே. ஆர். விஜயா
**ஜானகி சபதம்**

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி - கே.ஆர்.விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெயலலிதா நடித்த
**கலாட்டா கல்யாணம்**

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - பத்மினி
நடித்த
**அரசிளங்குமரி**
(புதியபிரதி)

**REGAL** Jaffna
Daily 10-30 a. m., 2-00, 4-30, 7-00, & 9-30 p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
**THE CASSANDRA CROSSING**
All passes and Concessions Suspended

**ராஜா**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி**
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி**
யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45காட்சிகள்
நாதம் கேட்குதடி நல்லூர் நாதன்......
கோபுர ஆலய மணியின் நாதம் கேட்குதடி
3 வது வாரம்
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடிக்கும்
**தெய்வம் தந்த வீடு** (சினிமாஸ் கோப்)

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பெரும் புகழும்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**பூவும் பொட்டும்**

**லிடோ**
(யாழ்.நகர்)
போன்: 7692 தினசரி 4 காட்சிகள்
**அருணகிரிநாதர்**


பரு. முதல் நாகர் கோவில்வரை

# மணல் அள்ளப்படுவதுபற்றி எம்.பி. தெரிவிக்கும் அச்சம்!

(பருத்தித்துறை)

''பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவில் வரையுள்ள கடற்கரைப் பகுதியில் உள்ள வெள் மணல், பெருமளவில் தினமும் அள்ளப்பட்டு வருவதினால் கடலரிப்பு ஏற்பட்டு நிலப்பிரதேசம் குறுகி வருகிறது, என்று பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் கவலை தெரிவித்துள்ளார்.

மண் அள்ளுவதைத் தடை செய்யும்முகமாககடந்த காலங்களில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், சில சமூக விரோதிகள் தொடர்ந்தும் கட்டுப்பாடற்ற முறையில் பெருமளவு மணலை அள்ளுகின்றூர்கள் எனக் குறிப்பிட்ட அவர்; இதனைத் தடை செய்யும் முகமாக இம்மணற் பிரதேசங்களை பருத்தித்துறை, புலோலி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களின் பராமரிப் பின்கீழ் கொண்டுவருதல் வேண்டும் என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோவுக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இன்றைய இராசிப்பலன்

ஆடிமாதம் 29-ந் திகதி
திங்கட்க்கிழமை
(14-8-78)

**மேடம்:-** பகைமூட்டம் வட்டமிடும். தொழில்துறையில் முட்டுக்கட்டைகள்தோன்றக்கூடும். கடிதமொன்று கவலையைத் தரலாம். மனத்திடம் வேண்டும்.

**இடபம்:-** கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் இடம் பெறும். எதிர்ப்புகள் மறைந்து சாதகமான சூழ்நிலை உருவாகும். கண்ணியம் சேரும்.

**மிதுனம்:-** சிந்தையில் குழப்பநிலை தோன்றக்கூடும். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் சிலர். கடன்படவும் நேரிடலாம். தெய்வநம்பிக்கை நன்று.

**கடகம்:-** பாக்கியவிருத்திடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும். தக்கசமயத்தில் உதவுவதற்கு தந்தை முன் வருவார். சிறப்பான தினம்.

**சிங்கம்:-** எதிலும் முன்னிலையில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்படும். சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும்.

**கன்னி:-** புதுமையான செய்தியொன்று கிடைக்கலாம். சிலர் அரசியலில் குதிப்பதற்கும் ஆலோசிக்கக்கூடும். பொதுமக்களின் ஆதரவுக்கும் பொருள்விருத்திக்கும் இடமுண்டு.

**துலாம்:-** எதிலும் தடுமாற் ஏற்படும். வியாபாரத்துறை மந்தநிலை காணப்படும். உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

**விருச்சிகம்:-** ஆசை வார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்கு சிலர் முனைவர். இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். நிதானம் நன்று.

**தனுசு:** வாழ்க்கையில் ஏற்படும் திடீர்திருப்பம் திரவிய லாபத்தைக்கொண்டுவரலாம். வணிகர்கள் புதிய துறைகளில் முதலீடுசெய்வதற்கு விரும்புவீர்கள். நண்பர்கள் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:-** அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம் பெறலாம். வைத்தியச் செலவுக்கு இடமுண்டு. நிதானம் வேண்டும்.

**கும்பம்:-** ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தாய்வழிமூலம்நற்செய்தி கிடைக்கலாம், விருந்துபசாரத்திற்கும் இடமுண்டு.

**மீனம்:-** நீண்ட நாட்களின் பின் இன்று நிறைவானதினம். எதிர்பார்த்த பொருள் கை வந்துசேரும். பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாறனின் கணை தாக்கும். சுவையான சம்பவங்கள் இடம் பெறும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# சுதந்திர...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்பற்ற, சோஷலிச தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச்செய்யக் கட்டளையிட்டபடியாலும்;

1976ம் ஆண்டு மே 14ந் திகதி பண்ணுகத்தில் கூடிய தமிழர் கூட்டணியின் முதலாவது மாநிலமாநாடு.

தமது உன்னதமான தாய் மொழியாலும் தம் மதங்களினாலும் தமது சிறப்புப்பெற்ற கலாச்சார பாரம்பரியங்களாலும் ஐரோப்பிய படையெடுப்பாளன் ஆயுதபலத்தினல் வெற்றிகொள்ளப்படும் வரை பல நூற்றுண்டுகளாக ஒரு பிரத்தியேகமான பிரதேசத்தில் தனிஅரசாகச் சுதந்திர வாழ்வு நடாத்திய வரலாற்றுலும், தமது பிரதேசத்தில் ஒரு தனிஇனமாகவாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உள்ள உறுதியாலும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சிங்களவரிலிருந்து வேறுபட்ட ஒரு தனித்தேசிய இனமென்று இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.

1972ம் ஆண்டுக் குடியரசு அரசியலமைப்பு தமிழ்மக்களை புதிய ஏகாதிபத்தியஎஜமானர்களான சிங்கள மக்களால் ஆளப்படும் அடிமைத் தேசிய இனமாக மாற்றி தாம் தவருக அபகரித்துக்கொண்ட அதிகாரத்தை தமிழ் தேசிய இனத்தின் தனிப்பிரதேசம் மொழி, குடியுரிமை, பொருளாதாரவாழ்வு வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பறித்துத் தமிழ்மக்கள் ஒரு தேசியஇனமென்று கூறுவதற்கான தகுதிகள் அத்தனையையும் அழிக்கின்றூர்கள் என்றும் இம்மாநாடு இத்தால் உலகுக்கு அறிவிக்கின்றது.

எனவே, தமிழீழம் என்ற தனியரசு அமைப்பதை ஒட்டி வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே வாழ்ந்து தொழில்புரியும் பெரும்பான்மையான தோட்டத்தொழிலாளரை உறுப்பினராகக் கொண்ட தொழிற்சங்கம் என்ற முறையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்த மனத்தடைகளை கவனத்திற்கு எடுக்கும் அதே நேரத்தில் இந்நாட்டுத் தமிழ் தேசியஇனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசியஇனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுதந்திரஇறமையுள்ள மத சார்பற்ற சோசலிச தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச்செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இம் மாநாடு மேலும் கீழ்க் கண்டவாறுபிரகடனப்படுத்துகின்றது.

1. தமிழீழ அரசு வடக்குக் கிழக்கு மாகாண மக்களைக் கொண்டதாகவும், தமிழீழக் குடியுரிமையை நாடும் இலங்கையின் எப்பாகத்திலும் வசிக்கும் தமிழ்பேசும் மக்கள் எல்லோருக்கும் உலகின் எப்பாகத்திலும் வசிக்கும் ஈழ வம்சாவளியைக் கொண்ட தமிழ்பேசும் மக்களுக்கும், பூரணசமத்துவ குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கும்.

2. தமிழீழத்தின் அரசியலமைப்பு அவ்வரசின் எந்த மதபிரதேச சமூகங்கள் மீது வேறு எப்பிரிவினரும் ஆதிக்கம்செலுத்தாமையை உறுதிப்படுத்தும்வகையில் ஜனநாயக ரீதியில் அதிகாரம் பரவலாக்கப்பட்டதாக அமையும்.

3. தமிழீழ அரசில் சாதி அழிக்கப்பட்டு தீண்டாமை என்ற கொடிய முறையும் பிறப்பினுல் உயர்வு, தாழ்வு கற்பிக்கும் நிலையும் வேரோடு களைடப்பட்டு எந்த உருவத்திலும் அவற்றை அனுஷ்டிப்பது சட்டத்தின்மூலம் தண்டிக்கபடும்.

4. தமிழீழம் மதச்சார் பற்ற அரசாக இருக்கும். அதேநேரததில் அங்கு வாழும் மக்கள் அனுஷ்டிக்கும் மதங்கள் எல்லாவற்றிற்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் அளிக்கும்.

5. தமிழீழத்தில் அரச மொழியாக தமிழ் இருக்கும். அதேநேரத்தில் சிங்கள அரசில் வாழக்கூடிய தமிழ்பேசும் சிறுபான்மையோருக்குகிடைக்கும் உரிமைகளுக்குச் சமதையாக தமிழீழத்தில் வாழக்கூடிய சிங்களம் பேசும் சிறுபான்மையோருக்கும் தமது மொழியில் கல்விகற்கும் அரசுடன் கருமமாற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

6. ஒரு சோசலிச நாடாக இருக்கப்போகும் தமிழீழத்தில் மனிதனை மனிதன் சுரண்டி வாழும் நிலை விலக்கப்பட்டும், உழைப்பின் பெருமை உறுதிப்படுத்தப்பட்டும், சட்டத்தினல் விதிக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டு தனியார்துறை இயங்க அனுமதிக்கப்படும். அதேநேரத்தில் உற்பத்திசாதனங்களும் அவற்றின் விநியோக வழிகளும், அரச கட்டுப்பாட்டுக்கும் உடமைக்கும் உட்படுத்தப்பட்டும் சோஷலிசதிட்டமிடுதலின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டும், தனிமனிதனே தனி ஒரு குடும்பமோ சேர்த்துவைக்கக்கூடிய செல்வத்திற்கு உச்சவரம்பு விதிக்கபபட்டும் இருக்கும்.

தமிழ்தேசிய இனத்தின் இறைமையையும் விடுதலையையும் வென்றெடுப்பதற்கான ஓர் செயல்திட்டத்தை தயாரித்து திருகோணமலையில் யூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் சமர்ப்பிக்குமாறும், போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்குமாறும் இம் மாநாடு தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவைப் பணிக்கிறது.

மேலும் சுதந்திரத்திற்கான புனிதப்போரில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்க முன் வருமாறும், இறமையுள்ள, சோசலிச தமிழீழ அரசு என்ற இலக்கை அடையும்வரை தயங்காது உழைக்குமாறும் தமிழ்தேசிய இனத்திக்குப் பொதுவாகவும், தமிழ்இளைஞர்க்கு சிறப்பாகவும் இம் மாநாடு அறைகூவல் விடுக்கின்றது (தொடரும்)

# யாழ்ப்பாணத்தில் புதியபஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

நேற்றுசாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நல்லூர் வழியாக புதிய பஸ்சேவை ஒன்று ஆரம்பித்துவைக்கப் பட்டது. இதைச் சாவகச்சேரி பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் ஆரம்பித்துவைத்தார். இவ்வைபவத்தில் வட பிராந்திய தலைவர் திரு. கே. அமரசிங்கம் , மற்றும் பணிப்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரம். யாழ். இ. போ. ச. பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். தியாகராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தில் திரு. ஆலால சுந்தரம் பேசுகையில் மிகக் குறைந்த வசதிகளுடன் திருப்திகரமான சேவையைச் செய்ய முயற்சித்து வருவதாகக் கூறினர். தமிழ்மக்கள்பண்பாடும், நாகரிகமும் நிறைந்தவர்கள்என்று கூறிப் பெருமைப்படுசின்றேம். இவர்கள்பஸ்களில் தாய்க்குலத்துக்கு தனியிடம் ஒதுக்குவதற்கு ஒத்துழைப் பளிக்காவிட்டால் மற்றவர்களின் கேள்களுக்கு ஆளாக நேரிடலாமென்றும் திரு ஆலாலசுந்தரம் சொன்னர்.

நல்லூர் திருவிழாவையொட்டி கொக்குவிலிருந்து திருநெல்வேலி பலாலி வீதிவழியாக நல்லூருக்கும் புதிய பஸ் சேவை யொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழர் சேர்ந்து வாழ்வதா அன்றேல் தனித்து வாழ்வதா? ஜே. ஆரோ, சிறிமாவோ தீர்மானிக்க முடியாது"

## கிளிநொச்சியில் மக்கள் விடுதலைமுன்னணிப் பிரமுகர்

(கிளிநொச்சி, வவனியா நிருபர்கள்)

''தமிழ்மக்கள் தாம்தனித்து வாழ்வதா சேர்ந்து வாழ்வதா என்பதைத் தீர்மானிப்பது அவர்களின் உரிமை. இதனைத் தீர்மானிப்பதற்கு ஜே. ஆருக்கோ சிறிமாவுக்கோ உரிமையில்லை''

இவ்வாறு கிளிநொச்சியில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணிப் பொதுக்கூட்டத்தில் பேசிய மேற்படி இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரானதிரு. உபதிஸ்ஸ சமநாயக்க கூறினார்.

பெருந்திரளான மக்கள் கூட்டத்துக்கு வந்திருந்தனர் திரு. சாமுவல் தலைமைவகித்தார்.

இந்நாட்டிலே தமிழர்கள் அநீதிக்கு உட்பட்டு விரக்தியின் எல்லைக்கு தள்ளப்பட்டு, இன்று தமிழீழம் கேட்கிறார்கள். தாம் தனித்து வாழ்வதோ, சேர்ந்து வாழ்வதோ என்று தீர்மானிப்பது தமிழினத்தின் உரிமை. இதை தீர்மானிப்பதற்கு ஜே. ஆருக்கோ சிறிமாவுக்கோ உரிமையில்லை. விமோசனம் கிடைக்குமென்று நம்பி சிறிமாவோவின் கையில் ஆட்சியைக்கொடுத்து ஏமாந்த தொழிலாளவர்க்கம், பின்னர் இப்போதுவிமோசனத்திற்காக ஜே. ஆரின் கையில் ஆட்சியை கொடுத்தது. ஆனால் இவ்வரசாங்கம் 1000க்கணக்கானதொழிலாளர்களையும் 971வங்கி ஊழியர்களையும் வேலைநீக்கம்செய்து அவர்கள் வயிற்றிலடித்தது மட்டுமன்றி இப்பகுதியில் அரசாங்க காணிகளில் குடியேறி விவசாயம்செய்யும்ஏழை விவசாயிகளை வெளியேற்ற கங்கணம்கட்டி நிற்கிறது. தொழிலாளர்கள், விவசாயிகள்மேல் கைவைப்பது அரசுக்கு என்றும் ஆபத்து என்பதை நாம் கூறிவைக்கவிரும்புகிறோம். தமிழ் பகுதிகளில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்களை உருவாக்கியும், தமிழருக்கெதிராக பாதயாத்திரையை மேற்கொண்டும், மலையக தொழிலாளிகளின் குடியுரிமையைப் பறித்தும், கலவரங்களை உருவாக்கியும், நாட்டின் ஒற்றுமையைக் குலைத்த ஐ. தே. கட்சியும், தனிச்சிங்கள சட்டத்தை கொண்டு வந்து இனத்துவேஷத்தை உருவாக்கியும் 71ல் 1000க்கணக்கான வாலிபர்களை கொன்றும், எவ்விதகாரணமுமின்றி தமிழ் வாலிபர்களை சிறையிலடைத்து வருத்தியும், பல தமிழ் இளைஞர்களை சுட்டுக்கொன்றும், நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்திய சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தான், முதலில் தடைசெய்யப்படவேண்டிய பயங்கர கட்சிகளாகும்.

நாட்டை வளர்ப்பதுதான் அரசாங்கத்தின் கடமை. புத்தமதத்தை காப்பாற்றி வளர்க்க வேண்டுமாயின் திரு. ஜயவர்த்தனவும், சிறிமாவும் அரசைக் கைப்பற்ற வேண்டியதில்லை, புத்தபிக்குகளாக மாறலாம். இந்து சமயத்தை வளர்க்க வேண்டுமாயின் துறவிகளாக மாறலாம், கிறிஸ்தவத்தை வளர்க்கவேண்டுமாயின் போதகர்களாக மாறலாம்.

### தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை

தமிழர்கட்கு சுயநிர்ணய உரிமை அளிக்கப்படவேண்டுமென நாம் எமது கொள்கைப் பிரகடனத்திலும் கூறியுள்ளோம். இங்கும் கூறுகிறோம். அங்கும் கூறினோம். தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்காத, ஆதரிக்காத எந்த ஒரு குடிமகனுக்கும். எமது இயக்கத்தில் இடமில்லை. எம்மிடத்தில் இனத்துவேஷம் இல்லை. 71 கிளர்ச்சியின் போதும் நாம் எந்த ஓர் தமிழனுக்கு துன்பம் விளைவிக்கவில்லை. முதலாளித்துவத்திற்கு எதிராகவே போராடினோம். முதலாளித்துவ அரசை மாற்றி 95 வீதமான தொழிலாளர்களை கொண்ட புதிய அரசை அமைப்பதற்கும், தமிழர்களின் உரிமைகளை பெறுவதற்கும் எம்மோடு சேர்ந்து போராடும்படி உங்களை வேண்டுகிறேன்.

'தமிழ் மக்களுக்கு உரிமை தருகின்றோம். சம அந்தஸ்து கொடுக்கின்றோம்' என்று தமிழ் மக்கள் முன் பேசி வந்த இடதுசாரிக் கட்சிகள் சிங்கள மக்கள்முன் வகுப்புவாதத்தைப் பேசின. நாங்கள் இங்கு பேசுவதைத்தான் அங்கும் பேசுகின்றோம். எந்த விதமான முதலாளித்துவ அரசாங்கங்களினாலும் இந்நாட்டின் எந்த விதமான பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அவை வளர்ந்து வருகின்றன.

### கூட்டணி பற்றி சந்தேகம்

உண்மையான அரசொன்றிற்கு மதமோ மொழியோ தேவையில்லை. அவற்றின் பர்துகாவலனக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் இந்நாட்டின் அரசாங்கங்கள் சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் பேணிக்காக்கும் காவலனாயிருப்பது மட்டுமன்றி பல்லின பலமதமுள்ள இந்நாட்டில் பௌத்தத்தையும் சிங்கள மொழியையும் அரச மதமாகவும் அரச மொழியாகவும் கொண்டிருப்பது வேதனையாக உள்ளது. உண்மையான அரசாங்கம் இந்நாட்டில் ஏற்படவில்லை. முதலாளித்துவ அமைப்பில் உண்மையான அரசு ஏற்படும் என்று நம்பவே முடியாது. இலங்கையில் மட்டுமல்ல இந்தியா போன்ற முதலாளித்துவ அமைப்பு நாடுகளிலும் இனப்பிரச்னை தீர்க்க முடியாமல் இருக்கின்றது, எனவே தமிழ் மக்களும் தம்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முதலாளித்துவ அமைப்பு அரசாங்கங்களில் நம்பிக்கை கொள்வதைக் கைவிட்டு உண்மையான இடதுசாரி அமைப்புகளோடு தோளோடு தோள் நின்று போராடித் தமது பிரச்னைகளுக்கும் இந்நாட்டின் இதர பிரச்னைகளுக்கும் முடிவு கட்ட முன்வர வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி தனது லட்சியப் பாதையில் நின்று நழுவிவிட்டதோ? என்ற சந்தேகம் தமிழ் வாலிபர்கள் மத்தியிலும் எம்மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதற்கு த. வி. கூ, ஐ. தே. க.யுடன் கொண்டுள்ள உறவும் காரணமாய் இருக்கின்றது. இவர்கள் தமது இலட்சியத்தைக் கைவிட்டு மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை, என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் இப்பிரசாரக் கூட்டத்தில் மற்றும் பலர் பேசினார்கள். திரு. உபதிஸ்ஸ கமநாயக்காவினதும் ஏனைய சிங்கள வாலிபர்களினதும் சிங்களப் பேச்சுக்களை சிங்கள வாலிபர் ஒருவர் தமிழில் மொழிபெயர்த்தார்.

---

## "கேதீச்சரம் ஆலயத்திற்கு சிவபாதசுந்தரனார் தொண்டு"

### நினைவுவிழாவில் புகழாஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் திருக்கேதீஸ்வர ஆலயப் புனருத்தாரண சபையின் தலைவராக இருந்து அரிய பணியைச்செய்து சம்மந்தர் மடம் நடேசர்விக்கிரகம் போன்ற கொடைகளை வழங்கி சபையை நல்லமுறையில் வழிப்படுத்தினார்.

திருச்கேதீஸ்வர ஆலயத்தில் நடந்த சைவப்பெரியார் ஞாபகார்த்த நினைவுவிழா பொதுக் கூட்டத்தில் பேசிய பண்டிதர் க. வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

சுந்தரர் குருபூசையும் சைவப் பெரியார் ஞாபகார்த்த வழிபாடும் நினைவுவிழாவும் திருக்கேதீசரத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விக்டோறியாக் கல்லூரி மாணவர்சள் சுந்தரர் குருபூசையும் சைவட்பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாச் சபை, பெரியார், அமைத்த நடேசருக்கு விஷேச பூசையும் வழிபாடும் நடத்தினர்.

திரு. ந. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. க. கிருஷ்ணபிள்ளை பேசும்போது நாவலரின் விருப்புக்கமைய பல பல அரியபெரிய தொண்டுகளைச் சைவப்பெரியார் எழுத்தாலும் பேச்சாலும் செயலாலும் சாதித்ததை இந்த நூற்றாண்டு வைபவத்தில் நாம் நினைவுகூறவேண்டும் என்றார்.

திரு. க. அருணாசலம் பேசுகையில் பெரியாரின் வாழ்க்கை வரலாறு அவர் எழுதிய நூல்கள் யாவும் இன்றைய சந்ததியாரும் இனி வரும் சந்ததியாரும் தெளிவாக அறிவதற்கு சபை முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார்.

பண்டிதை திருமதி பாக்கியம் 'பித்தனைப் பத்தனாய்க் கொண்ட சுந்தரம்' என்ற பொருள்பற்றி விரிவுரையாற்றினார்.

இசைமணி திரு. நடேசன் சிவசண்முகமூர்த்தி 'சைவப் பெரியாரின் வாழ்க்கையும் சிறப்புரைகளும் என்ற பொருள்பற்றி சங்கீத கதாப் பிரசங்கம் செய்தார். கல்லூரி மாணவிகளின் பண்ணிசையும் இடம்பெற்றது.

திருமதி ச அமிர்தாம்பிகை எழுதிய சைவப்பெரியார் பிரபந்தத்திரட்டு என்ற சபையின் இரண்டாவது நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

---

## யாழ். நகரில் 'காசி'

(யாழ்ப்பாணம்)

கியூபாவில் நடைபெற்ற சர்வதேச இளைஞர் மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு நாடுதிரும்பிய காசிஆனந்தன் நேற்று யாழ்ப்பாணம்வந்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியிருக்கும் திரு. காசி ஆனந்தன் நேற்று வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்திற்கு வந்தார். (இ)

---

## பண்டிதமணிக்கு இன்று பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு இன்றுபிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வரவேற்பளிக்கப்படுகிறது.

பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில்' சிந்தனைக் களஞ்சியம்' என்ற நூலை யாழ்ப்பாண வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வெளியிட்டுவைப்பார் (இ)

---

## மாஜிமந்திரிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிமா பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் தேசிய அரசுப் பேரவையில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

உள்ளூராட்சி ஊழல்குறித்து விசாரணை செய்த ஆணைக்குழுவுக்கு குறிப்பிட்ட ஊழல்நடவடிக்கைகள் பற்றி விசாரணை செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் அதிகாரமே வழங்கப்பட்டது. ஆனால் கமிஷன், குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனையையும் சிபார்சுசெய்துள்ளது.

அமைச்சர்களை தம் முன் அழைத்து விசாரணை செய்ய கமிஷனுக்கு அதிகாரம்இல்லை. ஆனால் இக்கமிஷன் அமைச்சர்களை அழைத்து விசாரித்துள்ளது.

இக்கமிஷன் தனது நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்பட்டு தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களே என்ன என்று தெரியாமல் இருந்த பலரை விசாரித்துள்ளது. சிலர் விசாரிக்கப்படவில்லை ஆனால் அவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட உள்ளது.

### எதிர்க்கட்சியினர் கரகோஷம்

திருமதி பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருக்கையில் அரசு தரப்பில் அடிக்கடி கூச்சல் எழுப்பப்பட்டது.

அப்போது சபாநாயகர் அரசாங்ககட்சி எம். பி.க்களைப் பலமாகக் கண்டித்தபோது தமிழர் கூட்டணியினர் உட்பட எதிர்க்கட்சியினர் கரகோஷம் செய்தனர். (ம-இ)

---

## சபாநாயகர் கண்டனம்

''எதிர்கட்சியினர் பேசுவதற்கு உங்களால்இடமளிக்கமுடியாதென்றால் எதிர்க்கட்சி இல்லாத ஒரு பாராளுமன்றத்தை அமைத்துக் கொள்ளுங்கள். ஜனாதிபதியை மேற்கோள் காட்டிப் பேசும் நீங்கள் அவரின் கொள்கைகளின்படி நடக்கிறீர்களா?''

சபாநாயகர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் அரசாங்க பின்வரிசை உறுப்பினர்களைப் பார்த்து கடுமையான இக் கண்டனக் குரலைக் கடந்த வெள்ளிக்கிழமை சபையில் எழுப்பினார்.

தேசிய அரசுப் பேரவையில் வெள்ளியன்றுநடைபெற்ற விவாதத்தின் முழுவிபரத்தையும் நமது பேரவை நிருபர் நாளைய இதழில் தருகிறார். (ஆ-ர்)

---

## உள்ளூராட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கருத வேண்டும்.

லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை செய்து தீர்ப்பு வழங்க சட்டக்கோவைகள் உண்டு. அதிகார துஷ்பிரயோகம் என்றால அதை யார் எவ்வாறு நிர்ணயிப்பது? அதிகார துஷ்பிரயோகத்தை எவரும் வரையறை செய்ய முடியாது.

குற்றம் சுமத்தப்பட்டவர்க்ள் தமக்குக் கிடைக்க இருக்கும் தண்டனையைத் தெரிந்துகொண்டு வாதிட அனுமதிக்கப்படவில்லை.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில், குறிப்பிட்ட குற்றவாளிகள் உள்ளூராட்சி மன்றங்களில் தெரிவு செய்யப்படமுடியாதவாறு அல்லது வாக்களிக்க முடியாதவாறு உரிமைகளைப் பறித்திருக்கலாம், ஆனால் இச்சட்டமூலத்தின்படி அவர்களுக்கு அதிக தண்டனை வழங்குவது பொருத்தமற்றது. உங்களின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் இது முரண் என்று கூறினார்.

ஒருகட்டத்தில் குறுக்கிட்ட பிரதமர், தாங்கள் இயற்கை நீதியின் அடிப்படையிலேயே தண்டனை வழங்க உள்ளதாக கூறினார்.

---

## ஆழிக்குமரனின் மற்றொரு உலக சாதனை

(கொழும்பு)

ஆழிக்குமரன் ஆனந்தன் மற்றொரு உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்

நீச்சல் தடாகத்தில் சதுர விஸ்திரணத்துள் தவளைபோல் நீந்திக்கொண்டே வெள்ளியன்று காலை 7-15 மணிக்குத் தன் சாதனையை ஆரம்பித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரி நீச்சல் தடாகத்தில் இச்சாதனையை நிலைநாட்டிய திரு. ஆனந்தன் முதல் 5 மணித்தியாலங்களுக்கும் ஒரு நிமிடமேனும் ஓய்வெடுக்காது தொடர்ந்து நீந்தினார்.

அதன்பின் மணித்தியாலத்திற்கு ஒருமுறை ஐந்து நிமிடம்மாத்திரம் ஓய்வெடுத்தார்.

இச்சாதனையை நிலைநாட்டிய திரு. ஆனந்தனை பிரதிவிளையாட்டுத்துறை அமைச்சர் திரு. எட்வின் திலசரத்ன மாலை சூட்டிப் பாராட்டினார்.

புளோரிடாவைச் சேர்ந்த மொரி லூயிஸ் என்பவரால் கடந்த வருடம் நிலைநாட்டப்பட்ட 52 மணிநேர நீச்சல் சாதனையை முறியடித்து இவர் இப்புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். (உ)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka